
பாலகுமாரன்
இது போதும்

........................... நம்மால் எதைப்பற்றியும் சொல்லாமல் இருக்க முடியாது. பகிராமல் வாழ முடியாது. நேற்று ஒரு கனவு கண்டேன் என்பதும், இன்றைக்கு எங்கள் வீட்டில் இந்த உணவு என்பதும்,

எப்போதும் நான் வெள்ளை உடைகள் தான் அணிகிறேன் என்பதும் நம்மால் நெருங்கியவரிடம் சொல்லாமல் இருக்க முடியாது.

அதைப் போலவே நான் இடையறாது என்னை அவதானித்துக் கொண்டிருக்கிறேன். என் மனதை உள்மனதை கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லத் தோன்றும்.

உங்களுடைய இந்த விஷயம் உடைபட்டு போவதற்கு இது முக்கிய காரணமாக அமையும். ஏனெனில் இதைப்பற்றி உடனடியாக உங்களுக்கு ஏதேனும் ஒருகருத்து சொல்வார்கள்.

எதற்கு வெள்ளை உடை அணிகிறாய். கருப்பு உடை தான் நல்லது என்று சொல்வார்கள். இதோடு நீண்ட தாடியும், மீசையும் வைத்துக்கொள்ளேன்.

சிகையை பெரிதாக வளர்த்துக் கொள்ளேன் என்று ஆலோசனை சொல்வார்கள். இது நம்மை வேகமாக பற்றி அந்த விஷயத்தை முக்கியமாகக் கருதி தன்னை அறிதலை நழுவ விட்டுவிட நேரிடும்.

எனவே, பகிராமல் இருப்பதற்கு ஒரு பக்குவம் தேவைப்படுகிறது. என்னபக்குவம்?

நான்மிக உன்னதமான, உண்மையான ஒரு வேலையை செய்து கொண்டிருக்கிறேன். இதைப் பற்றிய எந்த ஆலோசனையும், இதைப் பற்றிய எந்த அபிப்ராயமும் அல்லது எந்த பாராட்டும் எனக்குத் தேவையே இல்லை என்றதெளிவு முதலில் வேண்டும்.

வணிகவியலிலும், இராணுவ முனைப்பிலும், மதம்சம்பந்தமான விவாதங்களிலும் இந்த கேள்வி பதில்களும், விமர்சனங்களும் முக்கிய பங்காற்றி வருகின்றன.

ஆனால் உள்ளார்ந்து தனக்குள் தன்னை கவனிப்பதற்கு ஒரு பொழுதும் இந்த விஷயங்கள் உதவிசெய்யாது.

சத்தியத்தை தேடுபவன் பறையறிவிப்பதில்லை வார்த்தைகளை வீண் செய்வதில்லை. அவன் உள்ளுக்குள் பார்ப்பவனாகவே இருக்கிறான்.

அந்த பார்ப்பவன் தான் அவனுக்குத் துணை. அந்த நோக்கு தான் அவனை அழைத்துப் போகிறது. இது ஒரு விதமான அமைதி. இது உண்மையின் அடர்த்தி. இது சத்தியத்தின் வேகம்.